# ஈழத் தமிழரது கூத்தரங்கில் கூத்துமீளுருவாக்கம் : தேவைகளும் சவால்களும்

EASTERN UNIVERSITY
24 NOV 2017

கந்தசாமி மோகனதாசன்
EU/PGS/2008/M.Phil(DT)/04

M.phil06
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, இலங்கை.

2015

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வு முன்னுரை

- **அறிமுகம் (Introduction)**

இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் தேசியம், அடையாளம், தனித்துவம் போன்ற கதையாடல்களும் அது சம்பந்தமான முன்னெடுப்புக்களும் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக 1960களிற்குப் பின்னர் தமிழர் மத்தியிலும் சிங்களவர் மத்தியிலும் தேசியக் கலைகள் சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் காரணமாக இலங்கைக் கலைகளின் தனித்துவங்கள் பேசப்பட்டதுடன் அதன் அடியாகப் புத்தாக்கங்களும் செய்யப்பட்டன. இவ்வகையில் சிங்களவர் மத்தியில் பேராசிரியர் சரச்சந்திராவும் தமிழர் மத்தியில் பேராசிரியர் வித்தியானந்தனும் கூத்தில் சில புத்துருவாக்கங்களை மேற்கொண்டு அளிக்கைகளாக அவற்றைச் செய்தனர். இத் தொடர்ச்சி அறுபடாமல் இற்றை வரை நடைபெற்று வருகின்றது. இவ் மீளுருவாக்கத்தின் பல்வேறு போக்குக்களையும், வளர்ச்சியையும் அறிமுகம் செய்வதோடு அம்மீளுருவாக்கம் பற்றிய விமர்சன ஆய்வாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

- **பிரச்சினை (Problem Statement)**

இந்த மீளுருவாக்கம் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் இன்று வைக்கப்படுகின்றன. மீளுருவாக்கம் என்பது காலனிய கொள்கைகளுக்கு ஏற்ப மத்திய தர வர்க்கத்தை நோக்கி நகர்ந்தது எனவும், கிராமக் கலைஞர்களிடமிருந்து கூத்தை மீளுருவாக்கம் செய்தோர் பிய்த்தெடுத்துவிட்டனர் என்றும் பின் நவீன, பின் காலனித்துவப் பார்வையில் புதிய விமர்சனங்கள் எழுகின்றன. இவை பரிசோதனைக்குரியவை.

- **கருதுகோள் (Hypothesis)**

கூத்தின் மீளுருவாக்கம் பல்பக்கப்பரிமாணம் கொண்டது. அது ஒவ்வொன்றும் அவ்வக்கால தேச வர்த்தமானங்களையும் கலைஞர்களின் தத்துவத் தளத்தையும் கொண்டது என நிறுவுதல்.

- **நோக்கம் (Purpose)**

கூத்தின் மீளுருவாக்கம் சம்பந்தமாக சாதக பாதகமான அபிப்பிராயங்களை ஆராய்ந்து ஒரு தெளிவான கருத்தினை முன் வைத்தலும் அதனடியாக தத்தம் வகைகளில் கூத்து மீளுருவாக்கம் செய்வோரிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்தவும் அதனை வளர்க்கவும் தத்துவப்பின்னணியினை வழங்கல்.

- **அடிப்படை ஊகம் (Basic Assumption)**

இந்த ஆய்வு இத்துறையில் வேலை செய்வோருக்கு ஊக்கம் கொடுப்பதாய் இருக்கும். காலனித்துவ வருகையால் அழிந்து விட்ட கூத்தை அதன் பல பரிமாணங்களிலும் வளர்த்தெடுக்க உதவும்.

- **முறையியல் (Methodology)**

பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் சி.மௌனகுரு, அம்பலத்தாடிகள், மூன்றாவது கண், திருமறைக்கலாமன்றம் போன்றோரால் மீளுருவாக்கப்பட்ட கூத்துக்கள் முதற்தர தரவுகளாகவும், இது சம்பந்தமாக வந்த கட்டுரைகள், ஆய்வுகள் இரண்டாந்தர தரவுகளாகவும் அமையும். இவ்வடிப்படையில் விபரிப்பு, விமர்சன முறையியலும் கோட்பாடுகளைப் பிரயோகிப்பது சம்பந்தமான முறையியலும் இதற்குப் பயன்படும்.

- **எல்லைகளும் எதிர்பார்ப்பும் (Scope and limitation of Research)**

இந்த ஆய்வு பொதுவாக இலங்கைக் கூத்து மரபைப் பற்றியிருந்த போதிலும் சிறப்பாக ஈழத்து தமிழ்க் கூத்து மரபினையே நுணித்து நோக்கும். இந்த நுணித்த நோக்கு மீளுருவாக்கம் செய்வோருக்கு அத்துறையில் ஆழமாக ஈடுபட உதவும்.

- **குறுகியகால நீண்டகாலத் தாக்கங்கள் (Short term longer effects)**

குறுகிய காலத்தாக்கமாக, இது சம்பந்தமாக வந்த வாதப் பிரதிவாதங்களை விமர்சனத்திற்குட்படுத்துவதாகவும், நீண்ட காலத் தாக்கமாக, தமிழர் மத்தியில் பயில் நிலையிலிருந்து அழிந்து கொண்டு வருகின்ற கலைமரபினை அழியாது பாதுகாத்தலுக்கும் அதனை வளர்த்தலுக்குமான உளப்பாங்கினையும் தத்துவார்த்த பின்னணியினையும் வழங்குதல்.

- **இயல் பிரிப்பு (Organization of Chapters)**

இது ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் இயலானது கூத்துமீளுருவாக்கம் பற்றிய இலக்கிய மீளாய்வாக அமைகின்றது. இதில் இவ்விடயம் சார்ந்த விளக்கம், இதுபற்றி இதுவரை இடம்பெற்ற ஆய்வுகள், இவ்விடயம் சார் நூல்கள், கட்டுரைகள் என்பன எடுத்தாளப்பட்டுள்ளன.

இரண்டாம் இயலானது "கூத்து மீளுருவாக்கம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விதமும் பயணித்துள்ள எல்லைகளும்" எனும் தலைப்பின் கீழ் வரலாற்று ரீதியாக 1960 களிலிருந்து கூத்தின் மீளுருவாக்க நடவடிக்கைகள் இடம்பெற்ற விதம் பற்றி ஆராய்வதாக அமைந்துள்ளது.

24 NOV 2017
EASTERN UNIVERSITY

மூன்றாவது இயலில் ‘‘கூத்துப் பிரதிகளின் பதிப்பு முயற்சிகள், இலக்கியத்தரம், குறைபாடுகள், மீளுருவாக்கம்’’ எனும் தலைப்பின் கீழ் கூத்துப்பனுவல் என்றால் என்ன? கூத்துப் பனுவலின் இலக்கியத்தரம் எவ்வாறு அமைந்துள்ளது? குறைபாடுகளை எவ்வாறு நீக்கலாம்? என்பன பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நான்காம் இயலில் ‘‘கூத்து மீளுருவாக்கலின் தேவையும் சவால்களும்’’ எனும் தலைப்பின் கீழ் கூத்து மீளுருவாக்கத்தின் அவசியமும் அதனை மீளுருவாக்கும் போது எவ்வாறான சிக்கல்களை எதிர்கொள்கின்றோம், என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளது.

ஐந்தாவது இயல் ‘‘தத்துவப் பின்னணிகளும் கூத்துமீளுருவாக்க விமர்சனங்களை எதிர்கொள்ளலும்’’ எனும் தலைப்பினூடாக இதுவரை கூத்துமீளுருவாக்கம் சம்பந்தமான விமர்சனங்களை ஆராய்வதாக அமைந்துள்ளது.

# பொருளடக்கம்

நன்றியுரை

ஆய்வுச்சுருக்கம்

**இயல் -1**

**கூத்துமீளுருவாக்கம் பற்றிய இலக்கிய மீளாய்வு**...............................1 - 30

1.1 கூத்துமீளுருவாக்கம்

1.2 கூத்துமீளுருவாக்கம் என்றால் என்ன?

1.3 கூத்துமீளுருவாக்க அர்த்தப்பாட்டின் சொற்பிரயோக மாற்றங்களும் பின்னணியும்

1.4 தமிழில் கூத்து, கூத்துமீளுருவாக்க நடவடிக்கைகள் சம்பந்தமாக இதுவரை இடம்பெற்ற ஆய்வுகள்

1.5 ஈழத்து கூத்து, கூத்துமீளுருவாக்கம் சம்பந்தமான நூல்கள்

1.5.1 பேராசிரியர். கா.சிவத்தம்பியின் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்

1.5.2 பேராசிரியர். சி.மௌனகுருவின் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்

1.5.3 கலாநிதி காரை சுந்தரம் பிள்ளையின் வட இலங்கை நாட்டார் அரங்கு

1.5.4 கலாநிதி சி.ஜெயசங்கரின் கூத்து மீளுருவாக்கம் (ஈழக் கூத்தின் புதிய பரிமாணம்)

1.5.5 பேராசிரியர். சி.மௌனகுருவின் நாடகம் - அரங்கியல் பழையதும் புதியதும்

1.5.6 செபமாலை அன்புராசாவின் மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் - ஓர் ஆய்வு

1.6 கூத்து, கூத்துமீளுருவாக்கம் சம்பந்தமான கட்டுரைகள்

1.6.1 நாட்டுக்கூத்தின் எதிர்காலமும் தேசிய அரங்கை நோக்கிய தேடலும் - யோ.யோண்சன் ராஜ்குமார் (ஆற்றுகை – 11)

1.6.2 கூத்தும் நடனமும் -கார்த்திகேசு சிவத்தம்பி (கட்டியம், தொகுதி-1)

1.6.3 கட்டியம், தொகுதி - 1, எண் - 6

1.6.4 ஓலை 48-49

1.6.5 கூத்தரங்கம் - அளிக்கை 7

1.6.6 ஆற்றுகை - ஒக்.டிசம்பர் 1994

**இயல் -2**

**கூத்து மீளுருவாக்கம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விதமும் பயணித்துள்ள எல்லைகளும்**............. 31 - 72

2.1 பேராசிரியர் வித்தியானந்தனின் கூத்தின் புத்துருவாக்க முயற்சிகள்

2.2 கூத்து மீட்டுருவாக்த்தில் சிவத்தம்பியின் பங்கு

2.3 கூத்து மீளுருவாக்கத்தின் தொடர்செயற்பாட்டில் சி.மௌனகுரு

2.4 கூத்து புத்துருவாக்கத்தில் குழந்தை செ.செபமாலையின் பங்களிப்பு

2.5 அம்பலத்தாடிகளுடன் இணைந்த இளைய பத்மநாதனின் கூத்து புத்துருவாக்க செயற்பாடுகள்

2.6 மீளுருவாக்க முயற்சிகளில் யாழ். திருமறைக் கலாமன்றமும் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களும்

2.7 கலாநிதி சி.ஜெயசங்கரின் பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டின் ஊடான கூத்து மீளுருவாக்கம்.

இயல் -3

**கூத்துப் பிரதிகளின் பதிப்பு முயற்சிகள், இலக்கியத்தரம், குறைபாடுகள், மீளுருவாக்கம் .............** 72 - 120

3.1 கூத்துப் பனுவல் என்றால் என்ன?

3.2 கூத்தின் தோற்றமும் அவற்றின் பதிப்பு முயற்சிகளும்

3.3 கூத்துப் பனுவல்களின் இலக்கிய செழுமை

3.3.1 அகவற்பா

3.3.2 வெண்பா

3.3.3 கலி வெண்பா

3.3.4 கட்டளைக் கலித்துறை

3.3.5 ஆசிரிய விருத்தம்

3.3.6 கொச்சகம்

3.3.7 கலிவிருத்தம்

3.3.8 கவி

3.3.9 தரு

3.3.10 சிந்து

3.3.11 தோடயம்

3.3.12 தாழிசை

3.3.13 உலா

3.3.14 கந்தார்த்தம்

3.3.15 பரணி

3.3.16 இன்னிசை

3.3.17 கீர்த்தனம்

3.3.18 வண்ணம்

3.3.19 தேவாரம், திருவாசகம்

3.4 கூத்துப் பிரதிகளில் காணப்படும் குறைபாடுகள்

3.5 கூத்து மீளுருவாக்க வரலாற்றினூடே பிரதிகளின் மீளுருவாக்கம்

3.5.1 பேராசிரியர் வித்தியானந்தன் கூத்துபுத்துருவாக்க காலத்திலெழுந்த பிரதிகளின் மீளுருவாக்க முறைமை

3.5.2 அம்பலத்தாடிகள் கூத்துப் பிரதிகளில் கையாண்ட புதிய முயற்சி

3.5.3 பேராசிரியர் சி. மௌனகுரு உருவாக்கிய கூத்துப் பிரதிகளும் அவற்றில் காணப்படும் மீளுருவாக்க முறைமையும்

3.5.4 சீலாமுனை பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டுச் சூழலில் பிரதிகளில் ஏற்படுத்தப்பட்ட மீளுருவாக்கற் சிந்தனை

இயல் -4

**கூத்து மீளுருவாக்கலின் தேவையும் சவால்களும்............** 121 - 148

4.1 கூத்து மீளுருவாக்கலின் தேவைகள்

4.1.1 தாம் வாழும் சூழலுக்கான இயைபை உருவாக்குதல்

4.1.2 தமிழரின் தேசிய அரங்க உருவாக்கத்தில் மீளுருவாக்கம்

4.1.3 பொழுது போக்குத் தன்மையும் காத்திரமான வெளிப்பாடும்

4.1.4 சமூக வளர்ச்சிக்குரிய கலைச் சாதனமாக கூத்தினை முன்னெடுத்தல்

4.1.5 கூத்து ஆற்றுகையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல்

4.1.6 உலக மயமாக்கல் சூழலினை எதிர்கொள்ளல்

4.1.7 ஆற்றுப்படுத்தும் அரங்காகக் கூத்து
4.1.8 கல்வியல் அரங்காக வளர்த்தெடுத்தல்
4.2 கூத்து மீளுருவாக்குவதிலுள்ள தடைகளும் சவால்களும்
4.2.1 அனுபவம் வாய்ந்த அண்ணாவிமார்களின் இழப்பு
4.2.2 ஒற்றைப் பரிமாணச் சிந்தனைகள்
4.2.3 நெகிழ்ச்சித் தன்மையற்ற போக்கு
4.2.4 பன்மைத் தன்மையும் தேர்வுகள் பற்றிய பிரச்சினையும்
4.2.5 பொருள் முதற் பின்னணி பற்றியதான பிரச்சினை
4.2.6 தவறான முறையியல்கள் பிரயோகம்
4.2.7 பங்கு பற்றுதல்களிலுள்ள சிக்கல்கள்

இயல் -5

**தத்துவப் பின்னணிகளும் கூத்துமீளுருவாக்க விமர்சனங்களை எதிர்கொள்ளலும்** 149 – 200

5.1 இயங்கியலும் சமூக, பண்பாட்டு, மரபுமாற்றமும்
5.2 நவீனமும் பின்நவீனமும்
5.3 காலனித்துவமும் பின்காலனித்துவமும்
5.4 அமைப்பியலும் பின் அமைப்பியலும்
5.5 விமர்சனம் என்றால் என்ன?
5.6 கூத்துமீளுருவாக்கம் சம்பந்தமான விமர்சனங்கள்
5.6.1 மரபுவழியாகக் கூத்தினை ஆடுவோர் வைக்கும் விமர்சனங்கள்
5.6.2 பல்கலைக்கழக மட்டங்களிலும் கிராம மட்டங்களிலும் கூத்து செயற்பாடுகளில் ஈடுபடுவோர்களால் வைக்கப்படும் கருத்துக்கள், விமர்சனங்கள்
5.6.2.1 பேராசிரியர். கா. சிவத்தம்பி
5.6.2.2 பேராசிரியர்.சி.மௌனகுரு
5.6.2.3 கலாநிதி. சி.ஜெயசங்கர்
5.6.2.4 குழந்தை.ம.சண்முகலிங்கம்
5.6.2.5 யோ. யோண்சன் ராஜ்குமார்.
5.6.2.6 து.கௌரீஸ்வரன்
5.6.2.7 க.அருந்தாகரன்
5.6.2.8 மரியசேவியர் அடிகளார்
5.6.2.9 மெற்றாஸ்மெயில்
5.6.2.10 பா.அகிலன்
5.6.2.11 பொ.பிரபாகரன்
5.6.2.12 இளைய பத்மநாதன்
5.6.2.13 கலாநிதி.க.ஸ்ரீகணேசன்
5.6.2.14 பா.இரகுபரன்
5.6.3 கூத்துச் செயற்பாடுகளில் ஈடுபடாதோர்களால் முன் வைக்கப்படும் கருத்துக்கள், விமர்சனங்கள்.
5.6.4 தத்துவார்த்தப் பின்னணியின்றிய விமர்சனங்கள்
5.6.5 கொள்கைகளைப் பிரயோகிப்பது சம்பந்தமான விமர்சனங்கள்

முடிவுரை
உசாத்துணைகள்